**தி/தி/புனித மரியாள் கல்லூரி**
**(தேசிய பாடசாலை)**
**இரண்டாம் தவணைப் பரீட்சை- 2022**
**வணிகக் கல்வி**

**தரம் - 12 வர்த்தகம் (2023)** **நேரம் - 3 மணித்தியாலம்**

**சுட்டெண் : ...............**

**அறிவுறுத்தல்கள் :**

- 1 தொடக்கம் 20 வரையான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- 21 தொடக்கம் 25 வரையான வினாக்களுக்கு சரியான விடையை புள்ளிக் கோட்டில் எழுதுக.
- 26 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.

## பகுதி - I

1. உற்பத்தியின் தன்மைக்கேற்ப வகைப்படுத்தும்போது முதலாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைத் துறைக்கு உரித்தாவதுடன் தொழில் மூலத்திற்கேற்ப வகைப்படுத்தும் போது கைத்தொழில் துறைக்குரியதாக காணப்படுவன முறையே,

   (1) சுரங்கமறுத்தல், கனிய அகழ்வு
   (2) விவசாயம், விடுதி, வசதி வழங்கல்
   (3) நீர் சுத்திகரிப்பு, கனிய அகழ்வு
   (4) ஆதன வியாபாரம், குடிபானம் வழங்கல்
   (5) சுரங்கமறுத்தல், கழிவகற்றல் (.......)

2.

| | வணிகக் கருமங்கள் | | உதாரணம் |
|---|---|---|---|
| A | உற்பத்தி | அ | பயிற்சியளித்தல் |
| B | நிதி நடவடிக்கை | ஆ | தரக் கட்டுப்பாடு |
| C | மனிதவளக் கருமங்கள் | இ | தகவல்களை இற்றைப்படுத்துதல். |
| D | தகவல் முகாமைத்துவம் | ஈ | மூலதனத்தை ஈடுபடுத்துதல் |

   வணிகக் கருமங்களையும் அவற்றுக்கான சரியான உதாரணங்களையும் கொண்ட தொகுதி

   (1) A - இ, B – ஆ, C - ஈ, D – அ
   (2) A - ஈ, B – ஆ, C - ஈ, D – இ
   (3) A – ஆ, B – ஈ, C – அ, D – இ
   (2) A – அ, B – ஆ, C - ஈ, D – இ
   (5) A - ஆ, B – ஈ, C – இ, D – அ (......)

3. முகாமையாளர், அரசு, பொதுமக்கள் போன்ற தரப்பினர் வணிகத்தில் அக்கறை கொள்வதற்கான காரணங்கள் முறையே

   (1) வணிகத்தின் விருத்தி தொடர்பில் அறிந்து கொள்வதற்கு/ பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் அளவிடுவதற்கு/ வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு
   (2) வணிகத்தின் இலாபத்தை உச்சப்படுத்துவதற்கு/ சந்தைப் பங்கினை அறிந்து கொள்வதற்கு/ வேலை வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்கு
   (3) சூழல் பாதுகாப்புத் தொடர்பில் தேடிப் பார்ப்பதற்கு/ தொடர்ச்சியாகக் கட்டளைகளைப் பெற்றுக் கொள்வதற்கு/ வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு
   (4) வணிகத்தின் விருத்தி தொடர்பில் அறிந்து கொள்வதற்கு/ வரிகளை அறவிட்டுக் கொள்வதற்கு/ சூழல் பாதுகாப்புத் தொடர்பில் தேடிப் பார்ப்பதற்கு
   (5) வணிகத்தின் இலாபத்தை உச்சப்படுத்துவதற்கு/ கடன் பணத்தின் பாதுகாப்பினை அறிந்து கொள்வதற்கு/ வணிகத்தின் நீண்டகால வாழ்தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு (......)

4. ஒவ்வொரு சூழற்க்காரணிகளுடனும் பலங்களைப் போலவே பலவீனங்களும் காணப்படுகின்றன..

- தீர்மானமெடுப்பதில் பின்னடைவு
- எதிரான மனப்பாங்கினைக் கொண்டிருத்தல்.
- காலங்கடந்த வளங்கள் காணப்படல்.
- பயிற்சியும் அனுபவமும் குறைவடைதல்
- வகிபாகங்களுக்கிடையே மோதல் உருவாதல்.
- குறைவான தொகையினர்
- பாதகமான வேலைப்பழக்கம் காணப்படல்.
- பிரிவுகளுக்கிடையே சிறந்த இணைப்புக் காணப்படாமை.

மேலே கூறியவற்றில் ஊழியர்கள் மற்றும் நிறுவனக்கட்டமைப்பின் பலவீனங்களை மட்டும் உள்ளடக்கிய தொகுதிகள் முறையே

(1) பயிற்சியும் அனுபவமும் குறைவடைதல், பிரிவுகளுக்கிடையே சிறந்த இணைப்புக் காணப்படாமை
(2) எதிரான மனப்பாங்கினைக் கொண்டிருத்தல், வகிபாகங்களுக்கிடையே மோதல் உருவாதல்
(3) பிரிவுகளுக்கிடையே சிறந்த இணைப்புக் காணப்படாமை, பாதகமான வேலைப்பழக்கம் காணப்படல்
(4) எதிரான மனப்பாங்கினைக் கொண்டிருத்தல், குறைவான தொகையினர்
(5) பாதகமான வேலைப்பழக்கம் காணப்படல்., எதிரான மனப்பாங்கினைக் கொண்டிருத்தல்

(……)

5. வணிகமொன்று நிலைபேறான தன்மையின் சார்பாக கருமமாற்றும் பொழுது கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள் வருமாறு :

a) பூரண வேலைவாய்ப்பு
b) வளப்பயன்பாடு
c) இடர் முகாமைத்துவம்
d) வினைத்திறன் கொண்டது (வளப்பயன்பாடு)
e) ஊழியர் தொடர்பு
f) போட்டி நிலைமை (நியாயமான வகையில்)
g) மனித மூலதனத்தைப் பராமரித்தல்

தரப்பட்டவற்றுள் பொருளாதார நிலைபேறான தன்மையின் சார்பாக கருமமாற்றும் பொழுது கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்களைக் கொண்டது

(1) a,d,f (2) b,d,e (3) c,d,f (4) a,e,g (5) b,e,f (……)

6. கவிதா தனது வீட்டிற்கு அருகிலுள்ள சில்லறைக் கடையில் பிஸ்கட் பக்கற் ஒன்றை ரூ 150 ற்கு வாங்கினாள். இரண்டு நாட்களின் பின்னர் பிஸ்கட் பக்கற்றை எடுத்த போது அது பழுதடைந்து இருந்ததை அவதானித்து கடைக்காரரிடம் இது எனக்கு வேண்டாம். பணத்தை தாருங்கள் எனக் கோரிய போது வியாபாரி விற்ற பொருளை மீண்டும் பொறுப்பேற்க்க முடியாது எனக் கூறினார். இங்கு இடம்பெற்ற வியாபார மோசடி யாது?

(1) பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்வதற்கான உரிமை
(2) தெரிவு செய்வதற்கான உரிமை
(3) இழப்பீட்டைப் பெறுவதற்கான உரிமை
(4) செவிமடுப்பதற்கான உரிமை
(5) தகவல்களை அறியும் உரிமை

(……)

7. ரவி புவி ஆகிய இருவரும் எவ்வித உடன்படிக்கையுமின்றி பங்குடமையொன்றை நடாத்தி வருகின்றனர். மூலதனத்திற்கு மேலதிகமாகப் தம்மால் வழங்கப்பட்ட பணத்தொகைக்கு 3% வட்டி பெற்றதுடன் புவி தனது சொந்த விருப்பின் பேரில் சுதன் என்பவரை பங்காளராக இணைத்துக் கொண்டார். மேலும் நிதி தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்காக ரவி சம்பளம் பெறுவதுடன் வணிகத்தின் கணக்கேடுகளை தனது வீட்டிலேயே பாதுகாப்பிற்காக வைத்துள்ளார். இங்கு மீறப்பட்ட பங்குடமைச் சட்ட நிபந்தனைகள் எத்தனை?

(1) 2 (2) 4 (3) 3 (4) 5 (5) 1

(……)

8.

| நியதிகள் | வரையறுக்கப்பட்ட தனிக்கம்பனிகள் | வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனிகள் |
|---|---|---|
| *அங்கத்தவர்கள்* | | |
| ஆகக் கூடியது | A | B |
| ஆகக் குறைந்தது | 01 | D |
| *இயக்குநர் சபை* | | |
| ஆகக் குறைந்தது | E | 02 |

தரப்பட்ட அட்டவணையில் A,B,D,E என்பன குறிப்பன முறையே

(1) 01/ வரையறுக்கப்படவில்லை/02/01
(2) வரையறுக்கப்படவில்லை /50 /02/01
(3) 50/வரையறுக்கப்படவில்லை/ 02/02
(4) 50/ வரையறுக்கப்படவில்லை/01/01
(5) 50/ வரையறுக்கப்படவில்லை/02/01

(……)

9. பின்வருவனவற்றுள் கூட்டுறவு வணிகம் தொடர்பாக ஏற்றுக்கொள்ளத்தக்க கூற்றாக அமைவது
(1) பொருட்களின் கடன் விற்பனைகள் இடம்பெறல்
(2) அன்னியோன்னிய ஒத்துழைப்புடன் கருமமாற்றுதல்
(3) சனநாயக ரீதியான நிர்வாகம் காணப்படாமை
(4) முகாமைத்துவக் குழுவானது வினைதிறன் மிக்கதாகக் காணப்படல்.
(5) நிதியீட்டல் வழிமுறைகள் வரையறையற்றதாக இருத்தல்.

(……)

10. கீழே தரப்பட்டவற்றுள் அங்கீகார வணிக முறையில் அங்கீகாரம் வழங்குபவர் பெறும் அனுகூலமாக அமைவது
(1) மூலப்பொருட்களைக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளல்
(2) முதலீடின்றி வணிகத்தை விரிவுபடுத்தக்கூடிய ஆற்றல் கிடைத்தல்
(3) தோல்வியடையக்கூடிய போக்கு குறைவாகக் காணப்படல்
(4) பிரசித்தி பெற்ற வியாபாரப் பெயரால் விளம்பரம் செய்தல் இலகு
(5) முகாமைத்துவப் பயிற்சி கிடைக்கப் பெறல்

(……)

11.

| | அரச துறை வணிக அமைப்புக்கள் | | உதாரணம் |
|---|---|---|---|
| A | அரச கூட்டுத்தாபனங்கள் | I | புகையிரதத் திணைக்களம் |
| B | அரச திணைக்களங்கள் | II | நகர சபை, பிரதேச சபை |
| C | அரச கம்பனிகள் | III | இலங்கை மகாவலி அதிகார சபை |
| D | உள்ளூராட்சி நிறுவனங்கள் | IV | வரையறுக்கப்பட்ட லிற்றோ வாயு கம்பனி |

அரச துறை வணிக அமைப்புக்கள் மற்றும் அவற்றிற்கான உதாரணங்களைச் சரியாகக் காட்டும் தொகுதி

(1) A – IV, B – I, C – III, D – II
(2) A – III, B – I, C – IV, D – II
(3) A – IV, B – II, C – I, D – III
(4) A – I, B – II, C – III, D – IV
(5) A – III, B – I, C – II, D – IV

(……)

12. முயற்சியாண்மையினூடாக பெறப்படும் நிறுவன ரீதியான அனுகூலங்களாக அமைவன

A வருமான சந்தர்ப்பங்கள் உருவாதல்
B மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வடைதல்
C வணிகக் கருமங்கள் விரிவடைதல்
D சந்தைப்பங்கு விரிவடைதல்.
E தொடர்ச்சியாக அபிவிருத்தியடைதல்.
F உளத்திருப்தி கிடைக்கப்பெறல்
G புதிய சந்தைகள் விருத்தியடைதல்
H போட்டி நிலைமைக்கு இலகுவாக முகங்கொடுத்தல்

(1) A,B,D,G (2) B,E,F,H (3) B,D,F,G (4) A,C,D,G (5) B,D,F,H

(……)

13. உள்ளக, வெளியக பிரிவினர்களுடன் சிறந்த இடைத்தொடர்பினைப் பேணுதலானது எத்தகைய முயற்சியாண்மைத் திறனாக கருதப்படும்
(1) தலைமைத்துவத் திறன்
(2) தொடர்பாடல் திறன்
(3) ஆளிடைத் தொடர்புத் திறன்
(4) அடிப்படை முகாமைத்துவத்திறன்
(5) வாழ்க்கைத்திறன்

(……)

14. சிறிய வணிகங்களை இனங்காண்பதற்கு இலங்கையிலும் பல்வேறு நிறுவனங்கள் பல்வேறு நியதிகளைப் பயன்படுத்துகின்றன.

| நியதிகள் | நிறுவனங்கள் |
|---|---|
| ஈடுபடுத்தியுள்ள மூலதனம் ரூபா 4 மில்லியனுக்கு மேற்படாத வணிகங்கள் | i. ............................................ <br> ii. ........................................... |
| iii. .................................................................. | கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு |

தரப்பட்ட அட்டவணையில் i,ii,iii குறிப்பிடப்பட்ட இடைவெளிகளில் வரவேண்டியவை முறையே,

(1) கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் / கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு / முதலிடப்பட்டுள்ள மூலதனம் ரூபா 20 பில்லியனுக்கு மேற்படாத வணிகங்கள்
(2) கைத்தொழில் அபிவிருத்திச் சபை / கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் / முதலிடப்பட்டுள்ள மூலதனம் ரூபா 20 மில்லியனுக்கு மேற்படாத வணிகங்கள்
(3) சிறு கைத்தொழில் திணைக்களம் / கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு / ஈடுபடுத்தியுள்ள மூலதனம் ரூபா 4 மில்லியனுக்கு மேற்படாத வணிகம்.
(4) கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு / கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் / முதலிடப்பட்டுள்ள மூலதனம் ரூபா 20 மில்லியனுக்கு மேற்பட்ட வணிகங்கள்
(5) சிறு கைத்தொழில் திணைக்களம் / கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு/ ஈடுபடுத்தியுள்ள மூலதனம் ரூபா20 மில்லியனுக்கு மேற்படாத வணிகம்.

(……)

15. சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்களுக்கு ஊக்குவிப்புக்களை வழங்கும் நிறுவனங்களும், அவைகளினால் வழங்கப்படும் ஊக்குவிப்புக்களில் சிலவும் கீழே தரப்பட்டுள்ளது.

| நிறுவனம் | வழங்கப்படும் ஊக்குவிப்புக்கள் |
|---|---|
| ஏற்றுமதி அபிவிருத்திச் சபை | A - வெளிநாட்டுச் சந்தை வசதிகள் |
| கைத்தொழில் அபிவிருத்திச் சபை | B - ஆலோசனைச் சேவையை வழங்கல் |
| சிறிய மற்றும் நடுத்தர அளவு முயற்சியாண்மைச் சபை | C - உட்கட்டமைப்பு வசதிகள் |
| இலங்கைத் தரக் கட்டளைகள் நிறுவனம் | D - சந்தைப்படுத்தல் வசதிகள் |

நிறுவனங்களால் வழங்கப்படும் ஊக்குவிப்புக்களின் ஒழுங்கு முறையானது

(1) B,D,A,C (2) D,C,A,B (3) C,D,A,B (4) D,B,C,A (5) C,B,D,A

(……)

16.

- முதலிடப்பட்ட மூலதனத்தின் அளவு
- வருடாந்தப் புரழ்வு
- வணிக ஒழுங்கமைப்பு முறை
- சந்தையின் தன்மை
- ஈடுபடுத்தியுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை
- பயன்படுத்துகின்ற தொழில்நுட்பம்
- பயன்படுத்தும் சக்தி

மேலே குறிப்பிடப்பட்டுள்ளவற்றுள் சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்களை வரைவிலக்கணப்படுத்தும் பண்பு ரீதியான காரணிகளை அடிப்படையாகக் கொண்ட நியதிகள்,

(1) வருடாந்தப் புரழ்வு, பயன்படுத்தும் சக்தி, சந்தையின் தன்மை
(2) வணிக ஒழுங்கமைப்பு முறை, பயன்படுத்துகின்ற தொழில்நுட்பம், சந்தையின் தன்மை
(3) ஈடுபடுத்தியுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை, பயன்படுத்துகின்ற தொழில்நுட்பம், வணிக ஒழுங்கமைப்பு முறை
(4) ஈடுபடுத்தியுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை, பயன்படுத்தும் சக்தி, வருடாந்தப் புரழ்வு
(5) வணிக ஒழுங்கமைப்பு முறை, முதலிடப்பட்ட மூலதனத்தின் அளவு, சந்தையின் தன்மை

(……)

17. பின்வருவனவற்றுள் நல்ல பணத்தின் பண்பாக ஏற்றுக்கொள்ள முடியாதது

(1) இலகுவாகக் கொண்டு செல்லக்கூடியதாக இருத்தல்.
(2) சிறிய அலகுகளாகப் பிரிக்கக்கூடியதாக இருத்தல்.
(3) பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருத்தல்.
(4) நீண்டகாலம் பயன்படுத்தமுடியாததாக இருத்தல்.
(5) போலிகளை உருவாக்குவது கடினமாயிருத்தல்.

(……)

18.

| நிதி நிறுவனங்கள் | உதாரணம் |
|---|---|
| அலகுப் பொறுப்பு | A - எல். ஓ. ஏ. சீ மைக்ரோ கிரடிட் லிமிடட் |
| முயற்சியாண்மை மூலதனக் கம்பனிகள் | B - ஆசா பீபல்ஸ் பிணையகக் கம்பனி |
| பங்குத் தரகுக் கம்பனிகள் | C - சிலோன் சேமிப்பு நிதியம் |
| விசேட குத்தகை நிதிக் கம்பனிகள் | D - இலங்கை வென்சர் லிமிடட் |

மேலேயுள்ள நிதி நிறுவனங்களுக்கான உதாரணங்கள் முறையே,

(1) B,D,A,C (2) D,C,A,B (3) C,D,B,A (4) D,B,C,A (5) C,B,D,A

(……)

19. பின்வருவனவற்றுள் உத்தரவுப் பத்திரம் பெற்ற வணிக வங்கியானது வணிகங்களின் செயற்பாட்டிற்குப் பங்களிப்புச் செய்யும் முறையாக அமையாதது
(1) குத்தகை வசதிகளை வழங்கல்.
(2) கால, சேமிப்பு வைப்புக்களைப் பொறுப்பேற்றல்.
(3) வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடல்
(4) முகாமைத்துவ ஆலோசனைச் சேவைகளை வழங்கல்.
(5) பல்வேறு துறைகளின் முயற்சியாளர்களுக்குக் கடன் வழங்குதல்

(……)

20. இலங்கையில் தனியார் துறைக்காகக் காணப்படும் பாரியளவு கொண்ட ஓய்வூதிய நிதியம் (1) ………………………………………………… ஆகும். இந்நிதியினை முகாமைத்துவம் செய்யும் பொறுப்பு (2) ……………………………………… இடம் காணப்படுகிறது.
இங்கு (1),(2) இலக்கமிடப்பட்ட இடைவெளிகளில் வரவேண்டியவை முறையே,
(1) அரச ஊழியர் நம்பிக்கை நிதியம் / தொழில் ஆணையாளர்
(2) ஓய்வூதிய நிதியம் / இலங்கை மத்திய வங்கி
(3) ஊழியர் நம்பிக்கை நிதியம் / தொழில் ஆணையாளர்
(4) நம்பிக்கை நிதியம் / இலங்கை மத்திய வங்கி
(5) ஊழியர் நம்பிக்கை நிதியம் / இலங்கை மத்திய வங்கி

(……)

(01 x 20 = 20 புள்ளிகள்)

21. (அ) வணிகங்களானவை ஏனையோருக்கு விற்பனை செய்வதற்காக பொருட்கள், சேவைகளை உற்பத்தி செய்தல் அல்லது கொள்வனவு செய்தலின் மூலம் பெறப்படுபவை ………………………… அல்லது …………………. பொருட்களாக இருக்க முடியும்.
(ஆ) ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் என்பதில் ………………………………………………. , …………………………………….. என்பன உள்ளடங்கும்.

22. (அ) பூகோள மயமாக்கம் காரணமாக நாடுகளிடையே பொருட்கள் சேவைகளின் ………………. கூடுதலாக இடம்பெறுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

(ஆ) தேவைகள், விருப்பங்களை நிறைவேற்றும் சந்தரப்பத்தில் எதிர்காலச் சந்ததிக்குத் தேவைப்படும் மானிட இயற்கை வளங்களைப் பாதுகாப்பதுடன், அதனை மேம்படுத்துவதற்கான முறைகளையும் மேற்கொள்ளும் போது அது …………………………………………………… என்ற நிலைக்கு மாற்றமடையும்.

23. (அ) அரச கூட்டுத்தாபனங்கள் ………………… …………………………. …………………… மூலம் மூலதனத்தைத் திரட்டிக் கொள்ளும் அதேவேளை அரச திணைக்களங்கள் ……………………………………. மூலம் தேவையான நிதியத்தை ஈட்டிக் கொள்கின்றன.

(ஆ) முயற்சியாண்மைச் செயல்முறையின் முதலாவது படிமுறையின்போது ……………………………….. …………………………………. வாய்ப்புக்களை அறிந்து கொள்ளல் என்பன இடம்பெறும்.

24. (அ)“நிச்சயமற்ற நிலைமைகளுக்கு முகங்கொடுப்பது முயற்சியாண்மையாகும்” இது ………………………………………. இன் முயற்சியாண்மை தொடர்பான வரைவிலக்கணமாகும்.

(ஆ) சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிக வெற்றிக்கு ஊக்குவிப்புக்களை வழங்க நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் செயற்றிட்டங்களில் ………………………………. ………………………………… என்பன விவசாய நடவடிக்கைகளுக்கான கடன் வழங்கும் திட்டங்களாகும்.

25. (அ) சந்தை இடைத்தரகராக ……………………………… ………………………………….. ………………………………………. போன்றோர் செயற்படுவதுடன் …………………………. விற்பனை செய்யும் இடைத்தரகர்களாக இவர்கள் கருமமாற்றுவர்.

(ஆ) சட்டப்பணத்தினைப் போன்று ………………………………. கொண்டிராததாயினும் பெறுமதிக்கேற்ப பெறுமானத் திரட்டுக் கருமங்களை நிறைவேற்றக் கூடியதும் இலகுவாகப் பணமாக மாற்றக்கூடியதுமான சொத்துக்கள் …………………………………….. எனப்படும்.

**(02x05 =10புள்ளிகள்)**

26. வணிகங்களில் ஏற்படக்கூடிய இடர் அல்லது நிச்சயமற்ற தன்மை 04 தருக.
……………………………… ……………………………..
……………………………… …………………………….

27. பங்குடைமை வணிகமொன்றிற்குரிய விசேட பண்புகள் 04 தருக.
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….

28. சமூக முயற்சியாண்மையின் மூலம் எதிர்பார்க்கப்படும் அனுகூலங்கள் 04 தருக.
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….

29. சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்களை ஊக்குவிப்பதற்கு அரசு எடுத்திருக்கும் நிதியல்லாத ஊக்குவிப்புக்களுக்கான உதாரணங்கள் 04 தருக.

…………………………………… ……………………………………
…………………………………… …………………………………….

30. இலத்திரனியல் பணத்தின் மூலமான கொடுப்பனவுகள் மேற்கொள்வதை இலகுபடுத்துவதற்கு வழங்கப்படும் சேவைகள் 04 தருக.
………………………………
………………………………
………………………………
…………………………….

**(02x05 =10புள்ளிகள்)**

**(மொத்தம் 40 புள்ளிகள்)**

# பகுதி – II

**தரப்பட்டவற்றுள் யாதேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.**

**(01)** சுகுமார் என்பவர் நகரின் மத்தியில் 'ஸ்வீட்ஸ் அன்ட் ஸ்நெக்ஸ்' (Sweets & Snacks) எனும் சிற்றுண்டி உணவு விற்பனை வணிகமொன்றை கடந்த நான்கு வருடங்களாக நடாத்தி வருகின்றார். வைபவங்களுக்கான கட்டளைகளைப் பெறுவதில் நகரின் முன்னணி நிறுவனமாக இது காணப்படுகின்றது. அறிவும், அனுபவமும் நிறைந்த முகாமையாளரான சரவணன் இவருக்குப் பக்கபலமாகக் காணப்படுவதுடன் அர்ப்பணிப்பு மிக்க ஊழியர்களும் இவரை மேலும் வெற்றிப்பாதைக்கு இட்டுச் செல்கின்றனர். கடந்த சில மாதங்களாக நகரினுள் வீடுகளுக்குச் சென்று பொருட்கள் விநியோகம் செய்வதையும் மேற்கொண்டு வருகின்றனர்.

(i) (அ) 'ஸ்வீட்ஸ் அன்ட் ஸ்நெக்ஸ்' வணிகத்தின் நோக்கங்கள் 02 தருக. (01 புள்ளிகள்)
(ஆ) நிகழ்காலத்தில் தகவல் தொழினுட்பத்தின் வளர்ச்சி காரணமாக சுகுமாரின் வணிகத்துறையில் ஏற்பட்ட நவீன போக்குகள் 02 தருக. (02 புள்ளிகள்)

(ii) (அ) உரிமை, உற்பத்தியின் தன்மையின் அடிப்படையில் இவ்வணிகம் எவ்வகைக்குள் உள்ளடங்கும்? (01 புள்ளிகள்)
(ஆ) இவ்வணிகத்தின் வணிகச் செயற்பாடுகளின் அடிப்படையில் 'சந்தைப்படுத்தல்' செயற்பாட்டின் கருமங்கள் 02 தருக. (02 புள்ளிகள்)

(iii) (அ) சுகுமார் வணிகத்தினால் சமூகத்திற்கு ஆற்றவேண்டிய பொறுப்புக்கள் 02 தருக. (02 புள்ளிகள்)
(ஆ) நிலைபேறான அபிவிருத்திக்காக வணிகங்களின் நவீன பயன்பாட்டு முறைகள் பற்றி ஆராய்க. (02 புள்ளிகள்)
(இ) இவ்வணிகத்திற்கு அரசு செல்வாக்குச் செலுத்தும் முறைகள் யாவை? (02 புள்ளிகள்)

(iv) இலங்கையில் நுகர்வோர் பாதுகாப்பிற்காக பல்வேறு அரச நிறுவனங்கள் தொழிற்படுகின்றன.
(அ) அத்தகைய இரு நிறுவனங்களைக் குறிப்பிட்டு அவை வணிகங்களுக்கு முக்கியத்துவம் பெறும் முறைகள் தலா 02 தருக. (02 புள்ளிகள்)
(ஆ) நுகர்வோர் பகுத்தறிவுள்ளவராக இருப்பதன் அவசியத்தை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(v) (அ) நிதிக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் கருவிகளில் ஒன்றான அளவுரீதியாகக் கடன்களுக்குக் கட்டுப்பாடுகளை விதித்தலை நடைமுறைப்படுத்தக் கூடிய முறைகள் 02 தருக. (02 புள்ளிகள்)
(ஆ) அரசின் இறைக் கொள்கையானது வணிகங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் முறைகளுக்கான உதாரணங்கள் 02 எழுதுக. (02 புள்ளிகள்)

**(20 புள்ளிகள்)**

**(02)** பொது நோக்கமொன்றை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஒன்றிணைந்திருக்கும் தனிநபர் குழுவொன்றினால் உருவாக்கப்பட்ட சமூக அலகொன்றே அமைப்பு ஆகும்.

(i) (அ) ஒழுங்கு முறையான அமைப்பொன்றில் காணப்படும் பொதுப் பண்புகள் 03 தருக. (02 புள்ளிகள்)
(ஆ) தனியாளுரிமை வணிகமொன்றை பதிவு செய்யும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் யாவை? (02 புள்ளிகள்)

(ii) (அ) பங்குடைமை ஒப்பந்தம் ஒன்று முக்கியத்துவமுடையதாகக் கருதப்படுவதற்கான 02 காரணங்கள் தருக. (02 புள்ளிகள்)
(ஆ) கம்பனியொன்றைப் பதிவு செய்யும் போது சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் யாவை? (02 புள்ளிகள்)

(iii) பின்வருவனவற்றை வேறுபடுத்துக.
- ➢ பட்டியலிடப்பட்ட பொதுக்கம்பனி, பட்டியலிடப்படாத கம்பனி
- ➢ கரைகடந்த கம்பனிகள், வெளிநாட்டுக் கம்பனிகள் (04 புள்ளிகள்)

(iv) (அ) கூட்டுறவுச் சங்கத்தின் மேம்பாட்டிற்காக முன்மொழியப்படும் ஆலோசனைகள் 04 தருக. (02 புள்ளிகள்)
(ஆ) வணிகங்களின் ஒன்றிணைதல் மேற்கொள்ளப்படும் இரு முறைகளை சுருக்கமாகக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(v) பொதுத்துறை வணிகங்கள் பொதுமக்களின் நலன் கருதியே நடாத்திச் செல்லப்படுகின்றன.
(அ) அரசு வணிகக் கருமங்களில் ஈடுபடுவதற்கான காரணங்கள் 02 தருக.(02 புள்ளிகள்)
(ஆ) அங்கீகார ஒப்பந்தமொன்றில் உள்ளடங்கும் விடயங்கள் 04தருக. (02 புள்ளிகள்)

**(20 புள்ளிகள்)**

**(03)** "ரதன் நட்டத்துடன் நடாத்திச் செல்லப்பட்ட பேருந்து ஒன்றினைக் குத்தகைக்கு எடுத்து புதிய பகுதிகளை அதனுடன் இணைத்து அவ்வீதியிலே செலுத்தி வருகின்றார்."

(i) (அ) மேற்கூறப்பட்ட சம்பவத்தில் வணிகம் தொடர்பில் ரதனின் வகிபங்கு எத்தகைய உற்பத்திக் காரணியைக் குறித்து நிற்கின்றது? (01 புள்ளிகள்)

(ஆ) இது தொடர்பான 'சர்வதேச தொழிலாளர் அமைப்பின்' கூற்று யாது? (02 புள்ளிகள்)

(ii) (அ) அவ் உற்பத்திக் காரணியின் முக்கியத்துவங்கள் 02 தருக. (02 புள்ளிகள்)

(ஆ) கவிதா 'ரதன் ஒரு சிறந்த வணிகர்' எனக்கூறுகின்றார். இக்கூற்றை நீர் ஏற்கின்றீரா? காரணம் தருக. (02 புள்ளிகள்)

(iii) (அ) ரதனின் செயற்பாட்டால் அவனது சமூகம் அடையக் கூடிய நன்மைகள் 02 தருக. (02 புள்ளிகள்)

(ஆ) ரதனின் பங்களிப்பு பொருளாதார விருத்திக்கு அடிகோலும். இதனை ஆராய்க. (03 புள்ளிகள்)

(iv) (அ) ரதன் தனது செயற்பாடுகளை வெற்றிகரமாக மேற்கொள்ள கடைப்பிடிக்க வேண்டிய படிமுறைகள் யாவை? (02 புள்ளிகள்)

(ஆ) ரதன் தனது செயற்பாடுகள் தொடர்பாக கொண்டிருக்க வேண்டிய பண்புகளையும், திறன்களையும் அட்டவணைப்படுத்துக. (02 புள்ளிகள்)

(v) (அ) மேலே (iii)(ஆ)இல் கூறியவற்றை விருத்தி செய்து கொள்வதற்கான முறைகள் யாவை? (02 புள்ளிகள்)

(ஆ) முயற்சியாண்மையின் இறுதி விளைவாக வணிகம் கருதப்படுவதற்கான காரணம் யாது? (02 புள்ளிகள்)

**(20 புள்ளிகள்)**

**(04)** கமலா என்பவர் பெண்களுக்கான நவீனரக ஆடைகளை வடிவமைத்துத் தைப்பதில் ஆர்வமுடையவர். அவர் தனது பிரதேசத்தில் ஆடை வடிவமைப்பு மற்றும் தையலில் தேர்ச்சியும் பயிற்சியும் பெற்ற பெண்கள் பத்துப் பேரைக் கொண்ட 'மொடன் டெக்ஸ்டைல்ஸ்' எனும் வணிகமொன்றை ஆரம்பித்து நடாத்தி வருகின்றார். ஆரம்பத்தில் பல்வேறு வகையான சிக்கல்களை எதிர்நோக்கிய போதும் தற்போது தனது வணிகத்தை வெற்றிகரமாக நடாத்தி வருகின்றார்.

(i) (அ) பருமன் அடிப்படையில் 'மொடன் டெக்ஸ்டைல்ஸ்' எப்பிரிவினுள் அடங்கும்? அதற்கான காரணத்தை தருக. (02 புள்ளிகள்)

(ஆ) இவ்வணிகம் தொடர்பாக சர்வதேச ரீதியில் முன்வைக்கப்பட்ட வரைவிலக்கணம் யாது? (02 புள்ளிகள்)

(ii) (அ) இவ்வணிகத்தின் பண்புகள் 02 தருக. (02 புள்ளிகள்)

(ஆ) கமலா இவ்வணிகத்தை ஆரம்பிக்கும் போதும் நடாத்திச் செல்லும் போதும் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் 02 தருக. (02 புள்ளிகள்)

(iii) (அ) கமலாவின் வணிக வெற்றிக்கு முயற்சியாண்மை முக்கியம் பெறுவற்கான காரணங்கள் 02 ஐக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) கமலா வணிகத்தை விரிவுபடுத்துவது சம்பந்தமான 'நிதி தொடர்பான' ஊக்குவிப்பு செயற்றிட்டம் பற்றிய உங்கள் ஆலோசனைகளை வழங்குக. (02 புள்ளிகள்)

(iv) (அ) பொருட்கள் சேவைகளின் பரிமாற்றத்தின்போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட எந்தவொரு ஊடகமும் பணம் எனக் கருதப்படும்.

(ஆ) பரிமாற்றத்திற்கு பணத்தின் தேவைப்பாட்டின் காரணங்கள் 02 தருக. (02 புள்ளிகள்)

(இ) பணத்தின் கருமங்களையும் வகைகளையும் அட்டவணைப்படுத்துக. (02 புள்ளிகள்)

(v) (அ) முதல் நிலை விற்பனையாளர்கள் எனப்படுவோர் யார்? (02 புள்ளிகள்)

(ஆ) முதலீட்டு முகாமையாளர்களால் வழங்கப்படுகின்ற சேவைகள் 02 தருக. (02 புள்ளிகள்)

**(20 புள்ளிகள்)**